புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2023** **23 செப்டம்பர் 2023**

## பத்திரிகை செய்தி

"அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டமைத்தல்: போரற்ற சகாப்தத்தை உருவாக்குதல்" என்ற தலைப்பில் ஒய் 20 கருத்தரங்கு கோவை கொங்குநாடுகலை & அறிவியல் கல்லூரியில் இன்று(23.09.2023) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் திருமதி சந்திர பிரியங்கா நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் உரையாற்றிய துணை நிலை ஆளுநர்,

- ஒரு நாட்டின் வளர்ச்சி எப்பொழுதும் பெண்களின் வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக இருக்கும். பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, பெண்களுக்கு 33 % ஒதுக்கீடு வழங்கியதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.
- ஜி 20 மாநாடு தேசதிற்கானது. இந்த Y 20 இளைஞர்களுக்கானது. இந்தியாவில் ஏறக்குறைய 60 % இளைஞர்கள் இருக்கிறார்கள். உலகில் அதிக இளைஞர்கள் கொண்ட நாடு இந்தியா.
- இந்த பூமியை அடுத்த தலைமுறைக்கு கொடுப்பதற்கும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கும் ஜி 20 மாநாடு நடக்கிறது. புவி வெப்பமயமாதல் என்பது மனிதருக்கு உடல்நிலை சரியில்லாதது போல. ஆகவே, பூமி வெப்பமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இளைஞர்கள் இதனை செய்ய முடியும். பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்து, மரங்களை நட்டு சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும்.
- இளைஞர்கள் ஒரு முன்னெடுப்பு எடுக்கும்போது தான் அந்த நிகழ்வு வெற்றி பெற முடியும் என்பதை பாரதப் பிரதமர் கூறியிருக்கிறார். ஏறக்குறைய 90,000 க்கும் மேற்பட்ட 'ஸ்டார்ட் அப்' கள் இந்தியாவில் வந்திருக்கிறது. இந்த ஸ்டார்ட் அப்கள் குறித்து நாம் பெருமை கொள்ள வேண்டும்.
- இதன் மூலம் இந்தியாவில் உற்பத்தியாகும் பொருட்கள் அதிகரித்து உள்ளது. இதைத்தான் பாரதப் பிரதமர் 'சுயசார்பு இந்தியா' என்கிறார். இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு வெளிநாடுகளில் மதிப்பு அதிகரித்துள்ளது.
- இதற்கு முன்பு, எந்தப் பொருட்களைப் பார்த்தாலும் அவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவைகளாக இருக்கும். வெளிநாட்டில் இருந்து வரும் பொருள்கள்மீது நமக்கு மோகம் அதிகமாக இருந்தது. ஆனால், வெளிநாடுகளில் பல கடைகளில் நம்ம நாட்டு பொருட்கள் அதிகமாக விற்பனைக்கு இருக்கிறது. அத்தகைய நிலைக்கு பாரதப் பிரதமர் உயர்த்தி இருக்கிறார்.

- இன்று ஒருவருக்கொருவர் நெருக்கமாக, பாதுகாப்பு இல்லாமல் அமர்ந்திருப்பதற்கு முக்கியக் காரணம் பாரதப் பிரதமரின் முயற்சியால் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நம் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசி மற்றும் பின்பற்றப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் தான் காரணம்.
- கொரோனா பெருந்தொற்று காலத்தில் நோய்த்தடுப்பு உடைகள் தயாரிப்பு நிறுவனம் இந்தியாவில் இல்லை. ஆனால், சமூகக் கட்டுப்பாடு நடைமுறைக்கு வந்த சில நாட்களுக்குள்ளாகவே பாரதப் பிரதமரின் முயற்சியால் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 2 லட்சம் பாதுகாப்பு உடைகள் தயாரிக்கும் நாடாக பாரதம் மாறி இருந்தது.
- வெளிநாட்டவர்கள் இங்கிருந்து கிளம்பும்போது இனி இந்த நாட்டிலிருந்து ஒரு குண்டூசி கூட கண்டுபிடிக்க முடியாது என்று கூறினார்கள். ஆனால் இன்று பல்லாயிரக்கணக்கான தடுப்பூசிகள் செய்து இருக்கிறோம்.
- ஜி 20 நடத்தியதன் மூலமாகத்தான் ஒய் 20 நடத்த முடிகிறது. ஜி 20 மாநாடு இந்தியாவில் நடைபெறுவதற்கு நிறைய திட்டங்களும் முயற்சிகளும் தேவைப்பட்டிருக்கும். அதனை சிறப்பாக நடத்திக்காட்டி இருக்கிறார் பாரதப் பிரதமர். இன்று சந்திரனின் தென்பகுதியில் விண்கலத்தை இறக்கிய ஒரே நாடு என்கிற பெருமையை இந்தியா அடைந்திருக்கிறது. இந்தியா சாதனைமேல் சாதனை புரிந்து கொண்டிருக்கிறது.
- பாரதப் பிரதமர் "ஐந்து ட்ரில்லியன் பொருளாதாரத்தை விரைவில் அடைய வேண்டும்" என்று கூறுகிறார். இந்த இலக்கை அடைவது குறித்த சந்தேகம் எழுகையில் "இலக்கை எப்பொழுதும் பெரிதாக வைத்து அதற்காக கடுமையாக உழைத்தால் கண்டிப்பாக அத்தகைய நிலையை நாம் அடைய முடியும்" கூறுகிறார்.
- உலகப் பொருளாதார மையமாக வேகமாக முன்னேறி வரும் நாடுகளில் இந்தியா ஐந்தாவது மிகப் பெரிய நாடாக முன்னேறி இருக்கிறது. பல மொழிகள், பல கலாச்சாரங்கள், பல எல்லைகள் கொண்ட நாடு இந்தியா. ஒரு திட்டத்துக்குள் அனைவரையும் கொண்டு வருவது மிகப்பெரும் சாதனை.
- 2020 புதிய கல்விக் கொள்கை நிறைய சிறப்பம்சங்கள் கொண்டிருக்கிறது. இது மாணவர்களை வகுப்பறையில் இருந்து உலக அரங்கிற்கு உயர்த்துகிறது. ஆனால், இது குறித்த பல விமர்சனங்கள் வருகிறது. இந்தக் கல்வியில் படிக்கும்போது வருங்காலத்தில் மாணவர்கள் வேலை பெறுபவர்களாக இல்லாமல் வேலை கொடுப்பவர்களாக இருப்பார்கள்.
- முத்ரா வங்கி திட்டத்தின் மூலம் 24 லட்சம் கோடி கடன் மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் 30 சதவீதத்திற்கும் மேல் பெண்கள் மற்றும் பழங்குடியினருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.
- இதுவரையில் இல்லாத வகையில் இளைஞர்களுக்கு இந்தியாவில் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதனை சிறப்பாக இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் நம்மை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
- பாரத தேசம் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வளர்ச்சியில் நம் அனைவரின் பங்கும் இருக்க வேண்டும். வீட்டில் மின்விளக்குகள் பயன்படுத்தி
- அறையை விட்டு செல்லும் பொழுது விளக்குகளை நிறுத்த வேண்டும். தண்ணீரை சீராக பயன்படுத்த வேண்டும். அலைபேசியை மட்டும் எப்போதும் பார்க்காமல் இயற்கையை ரசிக்க வேண்டும். நவீன தொழில்நுட்பக் கருவிகளை மிக ஜாக்கிரதையாக பயன்படுத்த வேண்டும்.

- இளைஞர்களுக்கு முன்பு காலத்தில் அவ்வளவு பிரச்சனைகள் இல்லை. ஆனால் இப்போது, இளைஞர்களுக்கு மிகப்பெரும் பிரச்சனையாக செல்போன் இருக்கிறது. அன்றைய பாடங்களை அன்றே படித்து பெரியவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். அதே நேரத்தில் சுயத்தோடும் நம்பிக்கையோடும் இருக்க வேண்டும்.
- ரஷ்யா இந்தியாவைப் போல விண்கலத்தை அனுப்புகிறது. ஆனால் அதில் முக்கிய அதிகாரியாக இருப்பவர் ஒரு இந்தியர். அமெரிக்காவில் இருக்கும் 70 கார்ப்பரேட் நிறுவனங்களை இந்தியர்களே வழிநடத்துகிறார்கள்.
- இந்தியர்களின் மூளை சுரண்டப்படுகிறது. சுவாமி விவேகானந்தர், "நம் அனைவரும் திறமையோடு பிறக்கிறோம்; ஆனால் அவற்றை எப்படி வெளிக்கொணர்வது என்று தெரியாமல் இருக்கிறோம்" என்று கூறினார்.
- இனி இந்தியா வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிற நாடு என்று சொல்ல முடியாது; வளர்ச்சி அடைந்த நாடு என்று சொல்ல வேண்டும். மாணவர்கள் நாட்டையும் வீட்டையும் பார்த்துக் கொள்ள வேண்டும். நாட்டை வளர்க்க வேண்டும்- வீட்டை வளர்க்க வேண்டும்.
- நாம் முதலில் மாற வேண்டும். அனைத்து மாற்றமும் நம்மிடம் இருந்தே தொடங்க வேண்டும். பாரதப் பிரதமர் சொல்வது போல பழக்க வழக்கங்களை மாற்றுவதன் மூலம் வாழ்க்கையை மாற்ற முடியும்.

என்று தெரிவித்தார்.